உ
சிவமயம்





அமரர்

# பொன்னுத்துரை சிவகுருநாதன்

(நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மருமகன்)

அவர்களின் நினைவு மலராக வெளியிடப்படும்

## நவாலியூர் சோமசுந்தரப்புலவரின்

# நாமகள் புகழ்மாலை

06.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இவ்வுலகில்
15.08.1924

இறையுலகில்
29.08.2017

அமரர்

# பொன்னுத்துரை சிவகுருநாதன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

இன்முகத்தர், எழில்மிகு பண்பாளர்
பொன்னுத்துரை சிவகுருநாதர் - மண்ணீத்து
ஏவிளம்பி ஆவணி ஏறும் அட்டமியில்
நாவிளம்ப நாதன் நல்லடிசேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம், நவாலியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பொன்னுத்துரை சிவகுருநாதன்

(நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மருமகன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

06.10.2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

அன்பும் பண்பும், கனிவும் கருணையும்,
ஆற்றலும் ஆதரவும், பரிவும் பாசமும்,
தியாக உணர்வும் திடமும் பரவி நிலவ
எமது இன்ப துன்பங்களில்
இதயக் கனிவுடன் இரண்டறக்கலந்து கணவராக,
குடும்பத் தலைவராக, தந்தையாக,
குருவாக, மாமனாக மாபெரும் பேரராக விளங்கிய
அமரர் பொன்னுத்துரை சிவகுருநாதன் அவர்களின்
ஆன்மாவுக்கு இந்த நினைவு மலரை
கண்ணீர் மல்கிக் காணிக்கையாகச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

கல்வாய் அகிலுங் கதிர்மா மணியுங்
கலந்துந் திவருந் நிவவின் கரைமேல்
நெல்வா யில்அரத் துறைநீ டுறையும்
நிலவெண் மதிசூ டியநின் மலனே
நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தா ரென்றுநா னிலத்திற்
சொல்லாய்க் கழிகின் றதறிந் தடியேன்
தொடர்ந்தேனுய் யப்போவ தோர்சூழல் சொல்லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும்
உடலும் உடைமையும் எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

சித்தனே அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழற்
சாட்டியக் குடியுள் ஏழிருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

நன்மை பெருகருள் நெறியே வந்தணைந்து
நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து
எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்
என்றவர் தஞ்
சென்னி மிசைப் பாதமலர் சூட்டினான்
சிவபெருமான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தெதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாளே.

*திருச்சிற்றம்பலம்*

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஈழவள நாட்டில் தோன்றிய இளஞாயிறு போன்ற நவாலியூர் முதுபெரும் புலவர், தங்கத்தாத்தா க.சோமசுந்தரப்புலவர் தமிழ் மகளை அழகு செய்த, தம் பாத்திறத்தால் அணிசெய்த பெரும் புலவராவார். இவரால் பல்வேறு காலங்களில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்து 'நாமகள் புகழ்மாலை' என்ற பெயரில் வெளிவந்த நூல், உயிருள்ள நூல்களின் வரிசையில் ஒன்றாக வைத்துப் போற்றத்தகும் உயர்வுடையது. 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய செழுந்தமிழ்ச் சொற்களால் யாக்கப் பெற்றிருத்தலால் நவில் தொறும் நவில் தொறும் நயம் பல பயப்பதாயுள்ளது. அத்தகைய இனிய நூலில், இருபத்து மூன்று தலைப்புகளில் செய்யுள்கள் உள்ளன. இந்நூலுக்கு புலவரின் மருமகள், திருவாட்டி, பண்டிதைமணி இளமுருகனார் பரமேஸ்வரி அம்மையார் அவர்கள் அரிய உரை எழுதியுள்ளார்கள். இந்நூல் இன்று கிடைப்பது மிக அரிதாக உள்ளது.

அந்நூலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட ஆறு தலைப்புக்களில் விளங்கும் பாடல்களை புலவரின் உடன் பிறந்த சகோதரி மனோன்மணி அம்மையாரின் மகன் பொன்னுத்துரை சிவகுருநாதன் அவர்களின் அமரத்துவ அஞ்சலி நூலில் உள்ளடக்குவது சாலப் பொருத்தமென நான் எடுத்துக்கூறியதை அமரரது குடும்பத்தவர்களும் விரும்பி ஏற்றுகொண்டதால், அவை இந்நூலில் இடம்பெறுகின்றன.

அவ்வகையில் இவ் அஞ்சலி நூல் தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரின் பாடல்களில் சில பகுதிகளை தமிழ் உலகிற்கு மீள வழங்குவதோடு, அமரர் பொன்னுத்துரை சிவகுருநாதன் அவர்களுக்கும் சிறந்த அஞ்சலியாக விளங்கும். இந்நூலை பலரும் கண்டு கற்றுப் பயன் பெறுவார்களாக.

அன்புடன்

**தமிழருவி த. சிவகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம், நவாலியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். பொன்னுத்துரை சிவகுருநாதன்

*அவர்களின்*

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் எழிலார் முத்து எனவும், இரத்தின துவீபம், தாமிரபரணி என்றும் போற்றப்படுகின்ற இலங்கைத் திருநாட்டின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணம். அங்கு கோழைபடாத மேழிச்செல்வரையும் குறைவுபடாது கல்விச்செல்வரையும் கொண்டு விளங்குவது நவாலி எனும் திருப்பதியாகும். தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவரால் ஏற்றம்பெற்ற இந்த நவாலியின் கண் இருமரபும் தூய உயர்சைவ வேளான்குள திலகர்களாகிய கதிர்காமர், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தபுதல்வரே புகழ்பெற்ற தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் ஆவார். ஏனையோர் ஆறுமுகம், வேலுப்பிள்ளை, மனோன்மணி, வேலாயுதம் ஆவர். பிள்ளைகளை நல்லறத்தோடு வளர்த்து அவர்களுக்கு உரிய பராயத்தில் பெற்றோர்கள் திருமணமும் செய்துவைத்தார்கள். அவ்வகையில் மனோன்மணி பொன்னுத்துரை எனும் மணாளனை கரம்பற்றி வாழ்ந்த இனிய வாழ்வின் பயனாக 15.08.1924ல் சிவகுருநாதன் மகனாகப் பிறந்தார். இவரது மூத்த சகோதரர்களாக குமாரசாமி, சிவபாக்கியம், மயில்வாகனம் ஆகியோரும் இளைய சகோதரர்களாக சண்முகநாதன், செல்லம்மா ஆகியோரும் உடன்தோன்றிச் சிறந்தனர். பிள்ளைகளை நல்ல பண்புள்ளவர்களாக வளர்த்தெடுத்த பெற்றோர்கள் அவர்களுக்கு செய்யவேண்டிய காலத்தில் ஆவண செய்து சிறப்பித்தனர்.

இயல்பாகவே அமைதி, அடக்கம் ஆகியவற்றை அருங்குணங்களாகக் கொண்ட சிவகுருநாதன் விவசாயத்தையும் பின் வர்த்தகத்தையும் மேற்கொண்டு, சிறப்பாகத் திகழ்ந்தார். இவருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வயது வந்தடுத்த காலத்தில் காலிங்கராயன் மன்னர் பரம்பரையில் வந்துதித்தவரும் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரான தம்பையா, பொன்னம்மா தம்பதிகளின் மகள் சிதம்பரேஸ்வரியை மணவாழ்வில் இணைத்து பெற்றோர்கள் மகிந்தனர். இவர் திருமணம் முடித்த வழியில் திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி, தணிகாசலத்தரசு, மனோன்மணி, பராசக்தி, தனஞ்ஜெயசிங்கம், சிதம்பரநாதன், கனகலட்சுமி ஆகியோர் இவருக்கு மைத்துனர்களாயினர்.

இல்லறம் எனும் நல்லறத்தை இனிமையோடும் எழிலோடும் நடத்தி வந்த சிவகுருநாதன் சிதம்பரேஸ்வரி தம்பதியின் வாழ்வு பொன்னாக மிளிர்ந்தது.

''மங்கலம் என்பது மனைமாட்சி மற்றதன்
நன்கலம் என்பது நன்மக்கட்பேறு''

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க நடத்திவந்த மங்கல வாழ்வின் பயனாக பர்வதநாதன் (சுவிஸ்), அருணகிரிநாதன் (இளைப்பாறிய நீர்பாசனத் திணைக்கள தொழினுட்ப உத்தியோகத்தர், வவுனியா), வரலட்சுமி (வவுனியா), மகாலட்சுமி (அதிபர், கீதாலயம் கலைக்கல்லூரி, டென்மார்க்), லேகா (சங்கீத ஆசிரியை, வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று மகிழ்ந்தனர். அன்பும் அரவணைப்புமாக பிள்ளைகளை வளர்த்து நல்ல கல்விச்செல்வத்தை அவர்களுக்கு வழங்கியதோடு, நல்ல பண்புள்ள, பார்போற்றும் பிள்ளைகளாக வளர்த்து ஆளாக்கினார்.

மூத்தமகன் பர்வதநாதன் கமலாவதியை திருமணம் முடித்த வழி சிவகுமார் லதாயினி Bsc Maths, (லண்டன்), கோபிநாத் Bca com, சுதா (லண்டன்), பிரசாந் Bca com (கனடா) ஆகிய பிள்ளைகளைப் பெற்று சிறப்புற வாழ்கின்றனர். இரண்டாவது மகனான அருணகிரிநாதன் சுதேசாவை திருமணம் முடித்து, கஜதுரஞ்சன் (ஆசிரியர் - வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்), சசிதரன் (கடல் உணவக தர நிர்ணயிப்பாளர் - Quality Controller - மூளாய்) ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்வுற வாழ்கின்றனர். பெண்களின் மூத்த மகளான வரலட்சுமி, பாலசுந்தரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர், வவுனியா) மணம்முடித்து குகப்பிரியன் (HSBC வங்கி, கொழும்பு) அவர்களை அன்பு மகனாகப் பெற்று நல்வாழ்வு வாழ்கின்றனர்.

இரண்டாவது மகளான மகாலட்சுமி மாமன்மகன் சத்தியமூர்த்தியை திருமணம் செய்து கோபிநேசன் கிருஸ்ணப்பிரியா (Msc in political science and International Development, டென்மார்க்), துஸ்யந்தன் தான்யா (Msc in public Health specialization Global Health, டென்மார்க்) ஆகிய பிள்ளைகளுடன் சிறப்பாக வாழ்கின்றனர்.

கடைசி மகளான லேகா தாய், தந்தையின் ஆசீர்வாதத்துடன் ஆசிரியையாக கடமைபுரிந்து வருகிறார். பேரப்பிள்ளைகள் திருமணம் புரிந்த வழியில் ஒலிவியா (லண்டன்), டில்வேஷ், ஹன்சியா, அஜய்ஸ் (லண்டன்), நாவீர்யாஅஞ்சலி (டென்மார்க்), வீராசத்தியன் (டென்மார்க்), விக்ரன்றொஜர் (டென்மார்க்) ஆகிய பூட்டப்பிள்ளைகளையும் பெற்று மகிழ்வோடு வாழ்ந்துவந்த வேளையில் காலனின் கண்பட்டது போல சிவகுருநாதன் அவர்களின் அன்பு மனைவி சிதம்பரேஸ்வரி 07.08.2013ல் அமரத்துவம் அடைந்தார். அன்பு மனைவியின் பிரிவால் சிவகுருநாதன் அவர்கள் மிகவும் வாடினாலும் பிள்ளைகளின் அன்பாலும் அரவணைப்பாலும் அத்துன்பத்தை ஓரளவு மறந்து வாழ்ந்துவரலானார். இரண்டாவது மகன் அருணகிரிநாதனின் பண்டாரிகுளம், வவுனியா இல்லத்தில் அவரது இளைய மகளதும் மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் சூழலில் துன்பத்தை மறந்து வாழ்ந்துவந்தார்.

நல்ல பண்பாளராகவும் பெரியோர்களை அறிஞர்களை பேணிப்போற்றும் இயல்புடையவர்களாகவும் இறைவன் மீது எல்லையற்ற பக்திகொண்டவராகவும் இறுதிவரை வாழ்ந்துவந்த சிவகுருநாதன் அவர்கள் 29.08.2017 அன்று அதிகாலையில் ஆவணி 13ம் நாள் வளர்பிறை அட்டமி திதியும் அனுச நட்சத்திரமும் கூடிநின்ற வேளையில், தன் இன்னுயிர் நீத்து இறைவன் திருத்தாளில் இணைந்து கொண்டார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகள் வணக்கம்

அருமருவு மொருகுடிலை அருள்நோக்கக் கருவாக்கும்
உருமருவு நாதவிந்தின் உறுமியற்கை ஒலித்திரளை
வீங்குநீர் வியன்கங்கை வேணியணி வேதியனும்
பூங்கடம்பு புரள கலப் புண்ணியனு முருவாக்கித்
தம்பதங்கள் விதிமுறையே நெஞ்சழுந்தித் தவங்கிடந்த
கும்பமுனி கரங்கொடுக்க அவன் மடியிற் குருந்தாகி
மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத்தே கிடந்து
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறுந்
தங்குமிடைத் தமிழுலகம் அரசுபுரி தமிழ்த்தாயே!

மன்னும் அருள் தன்மையிலும் வளமையிலும் புதுமையிலும்
உன்னைநிக ரானமொழி உலகினிலே ஒன்றுண்டோ

பாற்கடலின் விடங்கொடுத்த பண்ணவர்கள் நனிநாண
நூற்கடலின் சுவையமுதம் அரன்செவியில் நுழைத்தனையே

உருக்காணாப் பேரிருளில் ஒருவனுக்காய் ஒருத்தியிடை
இருக்காலுங் காணானை இருக்காலும் ஏவினையே

பெருமுதலை சிறுமதலை தரவருளிப் பெற்றோர்கள்
பொருமுதலுங் கருமுதலும் போக்கமொழி புகன்றனையே

நிறைமதி பொழிதரு நிலவெனு மெழிலினை
மறைபிணி கதவுடன் வழிவிடு மொழியினை
இருமையும் உதவிடும் இசைதரு மதியினை
வருமறி வினரக மகிழ்வுறு துதியினை
வரமிகு புலவர்கள் மனநிறை குறியினை
மதுரையி லரசியுன் மருவிய நெறியினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யுரைப்போர் புன்னாவிற் பொருந்தியதீட் டோட்டுதற்கோ
செய்யதமிழ்ப் பெருமாட்டி தீயிடைநீ குளித்ததுவே;

வேற்றுமொழி தீண்டுதலான் மேனிகழீஇக் கொள்வதற்கோ
ஆற்றெதிரே ஏட்டின்மிசை அம்மாநீ நீந்தியதே;

எஞ்சலிலா உயிர்மருந்து யானென்பது உணர்த்துதற்கோ
நஞ்சமுத மாக்கியெங்கள் நாயகிநீ நாட்டியதே;

நாவினிலே நின் றோய்நீ;
நல்லமொழி பயின்றோய்நீ;
பூவினிலே யமர்ந்தோய்நீ;
பூவுலகம் புரந்தோய்நீ;

உரையுநீ; பொருளுநீ;
உள்ளுநீ; புறமுநீ;
விரையுநீ; மலருநீ;
வித்துநீ; முறையுநீ;

என வாங்கு,
யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அருந்தமிழ்ப் பாவாய்! ஆருயிர் மருந்தே!
இருந்தவர்க் கொளியே! இசைமுரல் கிளியே!
நந்தா விளக்கே! சிந்தா மணியே!
பூமிசைப் பொலிந்தநின் தோமறு சீர்த்தி
புந்தியிற் கொண்டு சந்ததம் போற்றுவென்
தீதறு முன்புகழ் மாலை
மேதினி யெங்கும் விளங்குதற் பொருட்டே.

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமகள் புகழ்மாலை

## 1. செந்தமிழ்ச் செல்வி வழிபாடு

### காப்பு

செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை யாட்டியைத் தென்பொதியச்
சந்தனச் சோலையில் ஏழிசை கூவுந் தனிக்குயிலைச்
சிந்தையிற் பூத்துச்செந் நாவிற் பழுத்துச் செவிப்புலத்தே
வந்து கனியும் பனுவற் பிராட்டியை வாழ்த்துவமே.

### நூல்

வம்மின் புலவீர்! வம்மின் புலவீர்!!
இம்மையு மறுமையு நன்மை பயந்து
தொன்மையும் புதுமையு மென் மையுந் தெய்வத்
தன்மையு நிரம்பி எழுமையுந் தொடர்ந்து
யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அமிழ்துறழ் தலைமைத் தமிழ்மொழி யுணர்ந்த
மெய்ந்நெறிப் புலவீர்! வம்மின் எல்லீரும்,
அந்தமும் நடுவும் ஆதியுந் தெரியாச்
செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுதும் யாமெலாம்;
நெடுங்கடல் உலகில் இடந்தொறும் இடந்தொறும்
வானுயர் சங்க மண்டபம் வகுத்து
மான விதானம் வளங்கெழ அமைமின்!
ஊக்கமு நெருங்கிய வொருமையு மென்றா
நீக்கமி லுழைப்பு நேர்மையு மென்றா
மாக்குலைக் கமுகும் வாழையு நடுமின்!
தூக்குறு குரும்பையுந் தொடையலுந் தொடுமின்!
பொற்புறு பொறுமைப் பொலங்குட நிரைத்துப்
புத்துணர் வென்னும் பொன்முளை பரப்புமின்!
பழையன திருத்திப் புதியன புனைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மை நறும்புகை யெடுத்து மீயுயர்
வாய்மை விளக்கம் வயின்றொறு மேற்றுமின்!
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமெனுந்
தண்டமிழ்க் கனகத் தாமரைப் பீடிகை
மண்டபம் பொலிய வைத்துப் பண்டைநாள்
வடாஅது வான்றொடு வேங்கட மலையுந்
தெனாஅது குமரித் தெண்டிரைப் பௌவமுங்
குடாஅதுங் குணாஅதுந் தொடுகடற் பரப்புமென்று
அந்நாள் வரைந்த இந்நான் கெல்லையுள்
அண்டரும் விழையுந் தண்டமி ழகத்தில்
ஆடகக் குடுமி மாடக் கூடலில்
முதலிடை கடையெனு மரணொரு மூன்றில்
திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுஞ்
சூர்முத றடிந்த வீரவேல் முருகனுங்
கடன்மிடல் சாய்த்த குறுநெடு முனியுந்
தோலா நாவின் மேலோர் குழுவும்
மந்திர மிருந்து தந்திரம் புரிய
ஆரிய மாதி அயற்புல மடவார்
சீரிய கேண்மையிற் சேவடி பரவப்
படியுயர் மண்டல மூன்றும் பரிக்கு
முடியுடை வேந்தருங் குறுநில மன்னரு
மடியுறை யீந்து குறுவினை யியற்றத்
தெரிதமிழ்ப் பலகை யரியணை மீமிசை
யுண்ணெகிழ் வேட்கைத் தண்ணொளி விரீஇத்
தேம்பிழி குவளைகண் ஆம்பல்வாய் மலர்ந்து
முல்லை யரும்பிப் பவளம் பூத்த
முழுமதி யாயிர மொருவயிற் குழீஇய
காட்சித் தன்ன மாட்சிகண் கவரத்
திருவுறை செங்கை நான்கி னொருகை
புத்தகச் செங்கோல் ஏந்த ஒருகை
வித்தகத் திவவின் நல்லியாழ் தடவ, ஒருகை
நச்சுநர் நச்சிய விச்சையி னுதவ, ஒருகை
அச்ச மகற்றி அருண்முறை தெரிக்க
உவமையின் றுயர்ந்த தமிழக மன்றியும்
இமிழ்திரை முந்நீர்ப் பெருநில முழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைப் பிறைமுடிப் பெம்மா னுறைதரு
வெள்ளியங் கிரியினும் உம்பருந் தனா அது
தெள்ளிய வாணைத் திகிரிசென் றுலாவ
முறைமுறை யிருந்து தனியர சாண்டும்;
அதாஅன்று,
அருளடை பொதுளித் தெருணிழல் வழங்கி
அன்பு மலர்ந்துயிர் இன்பம் பிலிற்று
மருவா நெறியறி வாதவூ ரெங்கோன்
திருவா சகமெனுஞ் செழும்பொழில் புகுந்து
மருப்பூ முகத்து வல்லிய ராயமொடு
திருப்பூ வல்லி விருப்பொடு கொய்துங்
குயிலொடு கூவியுங் கிளியொடு மிழற்றியும்
பயின்மணிப் பாவை நயமுறப் புனைந்தும்
வாசந் திமிர்ந்து ஊசல் ஆடியும்
அம்மனை யாடியுங் கொம்மை கொட்டியுஞ்
சேரன் செய்த திருக்கிளர் சிலம்பிற்
கந்துக வரியிற் பந்துவந் தடித்துஞ்
செவிச்சுவை நிரம்பிய கவிச்சுனை குடைந்தும்
பொழில்விளை யாடல் எழில்பெற வாடியும்
அதா அன்று,
நீர்மேல் நடந்தும் நெருப்பிடைக் குளித்தும்
பார்முதிர் கருங்கடல் பாறையிற் கடந்தும்
மறைபிணி கதவந் திறவெனத் திறந்தும்
கடுபிணி மாற்றியுங் கடுவிடந் தீர்த்தும்
அருள்விளை யாடல் அளவில புரிந்தும்
நாப்புடை பெயர நானில மசைக்குங்
காப்புடை வாழ்க்கைக் கலைப்பெரு மாட்டியைச்
செந்தமிழ்ச் செல்வியைத் தேமொழித் தேவியைச்
சந்தனச் சிலம்பியைத் தாமரை யாட்டியைத்
தென்னவன் பாவையைச் செம்பியன் பூவையை
மன்னவன் சேரன் வரைதரு மயிலை
இன்னுயிர் நாவமர் பொன்னிறக் கிள்ளையை
ஏழிசை நறும்பொழில் கூவுவெண் குயிலை
விண்ணகப் புலவர் வெட்கிவா யூற
மண்ணகப் புலவர் வாரிவாய் மடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பெறல் அமுதைப் பெருஞ்சுடர் விளக்கைக்
தன்னருஞ் சேயில் தமிழ்மகா அர்க் காக்கும்
அன்னையை யன்னவ ளின்னலொ டுறைதரு
சிறுகுடின் மருங்கிற் குறுகுதிர் குறுகிப்
புறமொழி விழைவெனுஞ் செறியிரு ளகன்றன
மறுவறு புலமை வாரண மியம்பும்
தெளிவெனும் ஆயிரம் ஒளிநிரை பரப்பிப்
புகழெனும் பரிதி கடன்முக டெழுந்தனன்
அடியவ ருள்ளத் தறிவுகண் மலர
வடிவுடை நெடுங்கண் மலர்திறந் தன்னை
தொழுதகு பள்ளி யெழுகென வெழுப்பிச்
செம்பொன் தவிசின் உம்பரி னிரீஇ
அன்புநீ ராட்டி வெண்கலை யுடுத்திச்
சைவலப் பூங்குழல் ஐவகை முடிமின்!
மெய்வகைச் சாந்த விரைக்குழம் பணிந்து
செஞ்சொலில் தொடுத்த மஞ்சரி வளைமின்!
விதுப்பிறை பழித்த கதிர்ப்புறு நுதலிற்
பொங்கிய மகிழ்ச்சிக் குங்குமம் இடுமின்!
உய்வகை மும்மையின் ஆண்மை தெரித்துத்
தெய்வப் புலவன் செய்தருள் மணிமுடி
வணங்காச் சென்னி இணங்கச் சூட்டி
மென்பணைத் தோளினும் பொன்புணர் மார்பினு
மூவர் ஆரமு முனிவர் கோவையுந்
தேவர்மா, மணியு மேவர வமைமின்!
அன்பி னைந்திணை யாழ்வார் திருமொழி
பொன்புனை மாலை வேய்ந்து மின்பொலி
குண்டலம் வளையெனும் ஒண்டமிழ் இரண்டும்
காதினும் போதுறழ் கையினு மிடுமின்!
தணியாப் புலமைத் தண்டமிழ்ச் சாத்தன்
மணிமே கலையை மருங்குறச் சேர்த்திச்
சேரன் தந்த திருக்கிளர் சிலம்பு
வேரியந் தாமரை மெல்லடிப் புனைமின்!
நாலடிப் பாதுகை கீழுறக் கொளுவி
நாவணி தந்த பாவணி பலவும்
பொருந்துழி பொருந்துழி திருந்துபு பூட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பில் உடல்பொருள் ஆவியென றுரைசால்
அப்ப முப்பழம் அமுதமு நல்கி
மெய்ப்பொருள் விளக்கங் காட்டி யற்புடன்
ஊழி முதல்வி வாழிய வென்று
சொல்லாண் டியம்பும் பல்லாண் டியம்பி
முத்தமிழ் முக்குண மூவுரு வெனாஅ
முத்தொழில் மூவுயிர் மும்மல மெனாஅ
மூன்று குறித்த முழுவதுங் குறிக்குஞ்
சான்றவ ராய்ந்த தமிழ்மொழி மந்திரம்
"நாவியன் மருங்கி னவிலப் பாடி"
வலமுறை மும்முறை முறைமுறை வாராக்
கண்ணினீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப
நெஞ்சநெக் குருக அஞ்சலி செய்து
செந்திரு நாணச் சிதையா வளமருள்
சிந்தா மணியே! நந்தா விளக்கே!
ஆருயிர் மருந்தே! அடியவர் விருந்தே!
கற்றவர் களிக்க மற்றவர் கொளித்த
கற்பகக் கனியே! அற்புதத் தேனே!
அருட்பெருங் கடலே! இருட்பெருங் கடற்குப்
புணையே! தோன்றாத் துணையே! பிணையே!
கண்ணு நீயே! கருத்து நீயே!
எண்ணு நீயே! எழுத்து நீயே!
தபுண்ணிய முதல்வி போற்றியென் றாற்றவும்
அன்புடை நன்மொழி கூறி முன்புநின்று
அழுமின்! விழுமின்! எழுமின்! தொழுமின்!
ஆடலும் ஆடுமின்! பாடலும் பாடுமின்!
யானறி அளவையின் அன்றி நீவிர்
அறிந்தன வறிந்தன புரியிற் சிறந்ததன்
மூவா விளநலங் காட்டி வாய்மலர்ந்து
அஞ்சலிர் வாழியென்று இன்சொற் கூறி
வரம்பல நிரம்பவும் ஈயும்
அறம்பொருள் இன்பம்வீ டடைந்துவாழ் குவிரே!

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரை விளக்கம்

இவ்வாசிரியப் பாட்டிற், செந்தமிழ்ச் செல்வியாகிய நாமகளது வழிபாடு கூறுமுகத்தால், தமிழ்மொழியின் காலங்கடந்த பழமையும், இலக்கண இலக்கிய நூல்களின் பொலிவும், சமயக்குரவர் முதலாய அருட்சான்றோர் செய்தருளிய திருமுறை மந்திரச் செல்வமும், மூவேந்தரும் பிறரும் தமிழைப் பாதுகாத்த திறமும், இவை போல்வன பிறவும் கூறப்பட்டுள்ளன.

கி.பி. 1925ஆம் ஆண்டிலே புலவர் இதனைப் பாடித் தமிழ் புலவர் குழுமிய மாசபையில் அரங்கேற்றி முதற்பரிசும் வித்துவ சன்மானமும் வழங்கப்பட்டார் என்ப.

செந்தமிழ்ச் செல்வி வழிபாடு என்று ஆசிரியர் பெயர் தரினும், இதன் கண் ஆற்றுப்படையின் இலக்கணமும் அமைந்து கிடத்தலின், செந்தமிழ்ச் செல்வி ஆற்றுப்படையெனலும் பொருந்தும்.

பனுவல் - கலை, பிராட்டி - பெருமாட்டி, வம்மின் - வந்து சேருமின். தெய்வத் தன்மை - கடவுட்டன்மை. அஃது, எலும்பைப் பெண்ணாக்கியதும் மறைக்கதவினைத் திறந்ததும் முதலாய அருட்செயல்கள்.

மெய்ந்நெறிப் புலவர் - கற்பன கற்று ஒழுக்கம் நிரம்பிய பொய்யடிமையற்ற புலவர்கள்.

விதானம் - மேற்கட்டி. மானம் என்பது தன்னிலையிற் றாழாமையும், தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும். ஊக்கம் - மனவெழுச்சி. ஒருமை - ஒற்றுமை. நேர்மை - நீதி. வடாஅது - வடக்கிலுள்ளது. குணாது - கிழக்கிலுள்ளது. தெனாஅது - தெற்கிலுள்ளது. குடாஅது - மேற்கிலுள்ளது. பௌவம் - கடல். ஆடகம் - பசும்பொன். திரிபுரம் - முப்புரம். சூர்முதல் - சூரபன்மன். தடிந்த - அழித்தருள் செய்த. மிடல் - வலிமை. தோலாநா - பொய்யாத மெய்ந்நா. அயற்புலம் - அயலிடம். மண்டலம் மூன்று - சேர சோழ பாண்டி நாடுகள். அவை கடவுணெறியிலும் நாகரிகத்திலும் மேம்பட்டு நின்றமையின் ''படியுயர் மண்டலம்'' எனப்பட்டன.

தெரிதமிழ்ப் பலகை - சிறப்பும் சிறப்பின்மையுந் தெரிக்குஞ் சங்கப் பலகை, குழீஇய - சேர்ந்த. மாட்சி - தெய்வத் திருமாண்பு. திரு - அருட்டிரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சுநர் - விரும்புவோர். திவவு - யாழ்வலிக்கட்டு. முந்நீர் - கடல். பிள்ளைப் பிறை - இளம்பிறை. வெள்ளியங்கிரி - திருக்கைலாசமலை. உம்பர் - தெய்வ நாடுகள், தமிழ் வெள்ளியங்கிரியிலும் தெய்வ நாடுகளிலும் முற்காலங்களிற் பயிலப்பட்டு வந்த உண்மையைச் சேரமான் பெருமாள் நாயனார் திருவுலா வரங்கேற்றிய வரலாற்றாலும், "சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்" என்னும் திருமந்திரச் செய்யுளாலும் அறிக.

திருவாசகம் என்பது, மணிவாசகப் பெருமான் மெய்யுணர்ச்சி பெற்ற ஞான்று திருவருட் டலைப்பாட்டினாற் பாடிய அருட் பாடல்களைக் கொண்ட தமிழ் மந்திரநூல். இலக்கியம் நயப்போர்க்குத் திருவாசகம் ஓர் இலக்கியப் பூங்கா.

மரு - வாசனை. ஆயம் - கூட்டம். குயில் - குயிற்பத்து. கிளி - திருத்தசாங்கம். பாவை - திருவெம்பாவை. ஊசல் - திருப்பொன்னூசல். அம்மானை - திருவெம்மானை. சேரன் - இளங்கோவடிகள். சிலம்பு - சிலப்பதிகாரம். கந்துகம் - பந்து. கந்துகவரிப்பாடல். கவிச்சுனை - செய்யுளாகிய நறுநீர்நிலை. தென்னவன் - பாண்டியன். செம்பியன் - சோழன். விண்ணகப் புலவர் - தேவர்கள். மண்ணகப் புலவர் என்றார். தமிழ்நாட்டுப் புலவர் அல்லாதாரும் தமிழ்ச்சுவை கண்டு அள்ளிப் பருகி இன்புற்றமை தெரித்தற்கு.

புறமொழி விழைவு - ஆங்கிலம் முதலிய வேற்றுமொழிகளிற் கொண்ட காதல் - அக் காதலைச் செறியிருள் என்றார், தம்மையும் தமது மொழிப் புலமையையும் மறைந்தமை நோக்கி. வாரணம் - சேவல். பள்ளி - துயில்.

சைவலம் - பாசி. ஐவகை - கூந்தலை முடிக்கும் ஐந்து வகை. மஞ்சரி - மாலை. விதுப்பிறை - பிறைச் சந்திரன். மூவராரம் - மூவர் தேவாரம். கோவை - திருக்கோவையார். தேவர்மாமணி - திருத்தக்க தேவர் அருளிய சிந்தாமணி. அன்பினைந்திணை - இறையனாரகப் பொருள். குண்டலம் - குண்டலகேசி. வளை - வளையாபதி. இவ்விரண்டு நூல்களும் எங்காவது ஏட்டுப் பிரதியில் இருத்தல் கூடுமென்பது ஆசிரியர் கருத்து.

போதுறழ் - பூவையொத்த. தணியாப் புலமை - மெய்ப்புலமை. நாலடி - நாலடியார். பாதுகை - மிதியடி. பல்லாண்டு - திருப்பல்லாண்டு. எட்டாந் திருமுறையிலுள்ளது. வேண்டிய தருதலிற் சிந்தாமணி. அழியாக் கலைச்சுடர் தருதலில் நந்தா விளக்கு. மன்னுயிர்களைப் புத்துணர்விற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றழைப்பித்து வளர்த்தலின் உயிர் மருந்து. அடியார்க்குப் புதுமை புதுமையான அருளாடல்கள் செய்தலின் விருந்து. கற்பகதருவிடம் இல்லாத அருள்வளத்தைத் தருதலின் இஃது, அதனினும் மேலாயதோர் கற்பகக் கனி. உண்ணவுண்ணத் தெவிட்டாது வேண்டப்படுதலில் அற்புதத்தேன். ஊழிதோறும் மன்னுயிர்க்கு அருளலிற் பெருங்கடல். அறியாமையைக் கடத்தற்குத் துணை செய்தலிற் புணை. உயிர்க்குயிராய்க் கலந்து நின்று பிறவிதோறும் உதவலின் தோன்றாத்துணை.

*****************

## 2. திருப்பள்ளியெழுச்சி

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனு மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி அவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 1

சந்தனச் சிலம்பினில் இசைக்குயில் கூவும்
தகுமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
சிறைபுடை அடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு அரற்றிய ஒலியும்
அடியவர் சயசய அமலையு மலியும்
எந்தமை ஆண்டருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடை அடியவர் அகப்புனற் றடந்தோர்
அறிவெனுந் தாமரை முகைநெகிழ்ந் தவிழ்ந்த
வன்புடைப் பேதைமை மடுவினிற் பூத்த
வஞ்சனை பொய்ம்முதன் மலர்வகை குவிந்த
இன்புடை யறம்பொரு ளின்பமும் வீடும்
எய்துதல் விருப்பினில் யாவரு மெழுந்தார்
என்புயிர் பெறவருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 3

புத்தலர் பூங்குழற் புயல்புறந் தவழும்
புதுநில வுமிழ்மதி முகமலர் பொழியு
முத்தன விள நகை முறுவலின் கருணை
முந்துறக் கண்டடி முளரிகள் தொழுவான்
பத்திமை யடியவர் கோயிலின் வாயில்
பாடின ராடினர் பரவினர் படர்ந்தார்
இத்தரை மதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாளே. 4

மீட்டிய யாழினர் குழலினர் ஒருபால்
வெண்டுகிற் பட்டினர் விரையினர் ஒருபால்
கூட்டிய சுண்ணத்தர் வண்ணச்செஞ் சாந்தர்
குளிர்புனல் மஞ்சனக் குடத்தினர் ஒருபால்
தீட்டிய செழுந்தமிழ் மாலையர் ஒருபால்
திருவடி வணங்குபு திறையொடு புகுந்தார்
ஏட்டினில் எதிர்தவழ் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரன்றனைக் கூடலில் அழைத்தமை பாடி
அருமறைப் பூட்டினை அவிழ்த்தமை பாடிச்
சிரந்தனை அறுத்துயிர் கொடுத்தமை பாடித்
தீயின்மேல் ஆடிய திறமையும் பாடி
வரந்தரு வாரமுங் கோவையும் பாடி
வாசகம் பாடிநல் வாய்மொழி பாடி
இரந்தனர் தொண்டர்கள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 6

முப்புர மெரிசெய்த முதுபரம் பொருளும்
முருகனும் ஒருகுறு முனிவனும் பிறரும்
செப்பிய செழுந்தமிழ்ப் பாண்டிநன் னாட்டில்
திருவொடும் வளர்த்தருள் செய்தவப் பாவாய்
கைப்பிடி புதுமலர் கொண்டுன தடியார்
காமரு சேவடி கைதொழ வடைந்தார்
இப்படி துதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 7

தேனெனப் பாலெனச் செழுங்கரும் பூறுந்
தீஞ்சுவைச் சாறெனத் தெள்ளமு தெனவே
மானன நோக்கிநின் வாய்மொழி கேட்டு
மகிழுபு புறமொழி மாந்தரும் வந்தார்
பூநனை புனைகுழற் பொன்னனை யாளே
பொற்சிலம் பலம்பிடு பூவடிப் பூவாய்
ஈனனை யும்மருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் பாற்கடல் தீவிடங் கொடுத்தார்
சிவனுக்கு நூற்கடற் செவியமு தளித்தாய்
காவியங் கயல்விழிக் கலைப்பெரு மாட்டி
காசினிக் கேகனி கற்பகக் கனியே
ஆவியை உருக்கிடும் அருள்மொழிப் பாவாய்
அகத்தியன் மடிமிசை அமர்ந்திடும் பூவாய்
ஏவிய புரிகுவம் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 9

ஆடினர் பாடினர் ஆர்த்தனர் செறிந்தார்
அம்மையுள் வாய்மொழி அருமையை அறிந்தார்
தேடினர் ஓடினர் சிறுமையை விடுத்தார்
தெருவெங்குஞ் செந்தமிழ்த் தோத்திரம் எடுத்தார்
வாடினர் உன்திருக் கோலத்தைக் காண
வந்தனர் செந்துவர் வாய்ப்பெரு மாட்டி
ஏடியல் வெண்மலர் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

*****************

## உரை விளக்கம்

திருப்பள்ளி எழுச்சி என்பது, துயிலினின்றும் எழுந்தருளுமாறு வேண்டும் முறைமை. திரு வென்பது சிறப்புப் பொருள் தரும் உரிச்சொல். புறத்திணையிலே இதனைத் துயிலெடை நிலை என்பர். வெண்டாமரைப் பூவிலும் பாவிலும் நாவிலும் வீற்றிருந்து நல்லருள் பாலிக்கும் கலையரசியாம் நாமகளை அருள்செய்து காக்குமாறு வேண்டித் துயிலெழுந்தருள்கவென்று பாடியதிது. திருப்பள்ளிஎழுச்சிக்குத் திரோதான சுத்தி என்பது தத்துவப் பொருள். ஆசிரியர் இதனைக் கி.பி.1925ஆம் வருடத்திலே அருளிச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) புறமொழி - ஆங்கிலம் முதலாய வேற்றுப்புல மொழிகள். கங்குல் - இருள். புறமொழிகளில் தமிழ்மக்கள் வைக்கும் விழைவினை ஆசிரியர் கங்குல் என்றார், அவ்விழைவு தமிழ்மொழியையும் தமிழ்ப் புலமையையும் மறக்கச் செய்து, அவர்களைத் துயரத்துள் வீழ்த்தி நிற்கும் இயல்பு நோக்கி. வானவன் - சூரியன். துன்னிய - நெருங்கி. தாரகைச் சூழல் - நட்சத்திரக் கூட்டம். தொண்டர் - மெய்ப் புலவரும் கலைமாச் செல்வருமாவர். நாமகளை முத்தமிழ்க் கடலாகவும் அமுதாகவும் உருவகித்த அழகு நயக்கத்தக்கது.

(2) சந்தனச் சிலம்பு - பொதியம். இசைக் குயில் - நாமகளது புகழாகிய குயில். அருட்பாவினச் சங்கு - தெய்வச் சான்றோர் பாடிய பன்னிரு திருமுறை முதலிய பாவினச் சங்குகள். எதிர் சிலம்புதல் - எதிரொலித்தல். கலைக் குருகு - அறிவுக் கலை அழகுக் கலைகளாய அன்னங்கள். அமலை - ஆரவாரம்.

(3) அகப்புனற் றடம் - நெஞ்சமாகிய வாவி. முகை - கட்டு. அவிழ்ந்த - விரிந்த. பேதைமை மடு - அறியாமையாகிய குளம். மக்கள் நெஞ்சங்களிலே வஞ்சனை பொய் முதலியனவும் வாய்மை அன்பு முதலியனவும் உண்டாதலின் அவையெல்லாவற்றையும் மலர் என்றார். நாமகள் அருளால் நற்குண மலர்கள் விரிந்தும் ஏனைய குவிந்தும் போதல் இயல்பு. அறமுத னாற்பொருளுமடைதலே பிறவிப் பயனும் நோக்கமு மாகலின் அவற்றைப் பெறுதற்கு அறிவுவளம் வேண்டி நாமகள்பா லெய்தினர் என்றவாறு.

(4) புத்தலர் - புதிய மலர். குழற் புயல் - கூந்தலாகிய மேகம். முளரி - தாமரை. பத்திமை - இடையறா அன்பு.

(5) யாழினர் குழலினர் - இசைக் கலைஞர். விரை - வாசனை. ஏட்டினி லெதிர் தவழ்ந்த வரலாறு பெரியபுராணத்தா லறிக.

(6) அரன்றனைக் கூடலிலழைத்து, அருமறைப் பூட்டினை யவிழ்த்தது, சிரந்தனை யறுத்துயிர் கொடுத்தது, தீயின்மேலாடியது என்னும் இவ் வரலாறுகளைப் பெரியபுராணத்திலும் திருவிளையாடற்புராணத்திலும் காண்க. ஆரம் - தேவாரம். கோவை - திருக்கோவை. தேவாரமும் திருக்கோவையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடு ஓதுவார்க்கு வரந்தருந் தன்மையவாதலின் வரந்தரு வாரமும் கோவையும் எனப்பட்டன. வாசகம் - திருவாசகம். வாய்மொழி - திருவாய்மொழி.

(7) முதுபரம்பொருள் - சிவபெருமான், இப்படி - இப்பூமி

(8) புறமொழி மாந்தர் - ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், இந்தி முதலிய புறமாழியாளர். புறமொழியாளர் நினது கலைவளங் கண்டு அவற்றைப் பெறுதற்கு வந்தனர் என்க. அலம்புதல் - ஒலித்தல். ஈனன் - எளியேன்.

(9) தேவர்கள் சிவனுக்குப் பாற்கடலிற் பிறந்த நஞ்சினைக் கொடுக்க, நாமகள் நூற்கடலமுதங் கொடுத்தாள் என்க.

(10) சிறுமை - புன்மை; என்றது, தமிழ்க் கல்வியை மறந்து வேற்றுமொழி கற்று அறமுத னாற்பொருளு மிழந்து தவிக்கும் பரிதாப நிலைமை. ஏடு - இதழ். வெண்மலர் - வெண்டாமரை மலர்.

இத்திருப்பள்ளியெழுச்சியைப் படிக்குங்கால், இதுகாறும் தமிழ்த் தெய்வத்தை மறந்தோமே, தமிழின் பெருமை இத்தகைத்தோ என்னும் ஓர் உள்ளக் கிளர்ச்சி பிறந்து புத்தார்வமும் புத்துணர்ச்சியும் பொங்கும். அதனால் தமிழ்க் கல்வியும் தமிழ்த் தெய்வ வழிபாடும் மீட்டும் நிலைபெறும். இதுவும் ஒருவகைத் திரோதான சுத்தியாம்.

*****************

## 3. குயிற் பத்து

பொன்பொதிந்த சிலைவளைத்துப் புரமுன் றெய்த
புண்ணியனும் பொறிமயில்வா கனனும் ஈயத்
தென்பொதிய முனிவளர்த்த திருவி னாளைத்
தென்பாண்டி நாடாளுந் தமிழ்த்தெய் வத்தை
மின்பொதிந்த விடையாளை வெண்பட் டாடை
விரித்துடுத்து வெள்ளைமலர் மேவி னாளைக்
கொன் பொதிந்த மனவிருட்கோர் விளக்கா னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டாடுங் கருங்கூந்தற் காட்டி னாளை
வடமாடு நறுங்களப முலையி னாளைக்
கண்டோடும் மொழியாளைக் கலைவ லாளர்
கவியோடுந் திரிவாளைக் கனலின் மேலே
பண்டேறி விளையாடும் பாவை யாளைப்
பாண்டிநெடும் பதியாளைப் பாடை மாக்கள்
கொண்டாடித் திறைகொடுக்க வளரும் ஞானக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 2

தீராத கொடும்பிணிகள் தீர்க்கின் றாளைத்
தென்பாண்டி நாடாளுந் தமிழ்த்தெய் வத்தை
வாராத சித்தியெலாம் வருவிப் பாளை
மன்னரொரு மூவரையும் வாழ்வித் தாளைச்
சேராதார் மனத்தகத்தே தித்தி யாளைத்
திகழொளியை நறும்பாகைத் தேனைப் பாலைக்
கூராத மனங்கூர்வித் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 3

சுடுபிணியுங் கடுவிடமுந் துரத்தி னாளைத்
தொண்டனுக்குக் கடவுளைத்தூ தாக்கி னாளை
அடுசுவையின் பாலமுதுந் தேனும் பாகும்
ஆகாத இனியமொழி அணங்கி னாளைக்
கடல்புடைசூழ் நெடுநிலத்துப் பதினென் பாடைக்
காரரும்வந் தடிபரவுங் கற்பி னாளைக்
கொடுவினையும் பிணியுமறுத் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிநடு முடிவுமிலா தமர்ந்த வாற்றால்
ஆருயிர்கட் குயிராகி அருளு மாற்றால்
ஓதுபணி மொழிதன்பால் உடைய வாற்றால்
ஊழிபல உலப்பினுமா றுறாத வாற்றாற்
பாதிமதி ஏறுசடைப் பரனே யென்று
பாவலர்கள் நிதந்துதிக்கும் பனுவ லாளைக்
கோதுபதி யாதெனையுந் தடுத்தாட் கொண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 5

பங்குக்குப் பட்டபனந் துண்டம் மூன்று
பழமுதவ வாய்மலர்ந்த பாட்டி னாளைக்
கொங்குக்குக் கிழியறுத்துக் கொடுத்திட் டாளைக்
குயக்கொண்டான் உயிர்நீக்கிக் கொடுத்திட் டாளை
அங்கணுல குக்கொளியாய் அமர்ந்திட் டாளை
அறுந்தசிரம் ஆயிரமும் அடைவித் தாளைக்
குங்குமப்பூண் முலையாளை எனையும் ஆண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 6

மூவாத சுவையமுதை முச்சங் கத்து
முளைத் தெழுந்த கற்பகத்தை முடிசேர் மன்னர்
பாவாலே எழுதுவித்த பாவை யாளைப்
பாண்டிவளம் பதியரசு பயில்கின் றாளைக்
காவலருந் தென்பொதிய மலைமேற் றோன்றுங்
கலையாருஞ் சுடர்மதியைக் கனியைத் தேனைக்
கோவாத மணிமுத்தை எனையும் ஆண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்கின்ற விழிக்குள்ளே விளக்கா னாளை
மென்கரும்பைச் செழும்பாகை விளரி யாழைப்
பழிக்கின்ற மொழியாளைப் பலதே யத்துப்
பாடைமட மங்கையர்கள் பதஞ்சே விக்க
அளிக்கின்ற வருளாளை அறிவா னாளை
ஆசுமுதல் நாற்கவியின் பொருளை அள்ளிக்
கொழிக்கின்ற சிவக்கொழுந்தை எனையும் ஆண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 8

அவியாத செழஞ்சுடரை அன்பர்க் கென்றும்
ஆறாத துன்பமெலாம் ஆற்று வாளைக்
கவியாதும் அறியாவென் நாவின் மேவிக்
கவியுரைத்துக் கேட்டுமகிழ் கலைவ லாளைப்
புவியாத ரித்தமிழ் புகல்கின் றாளைப்
பொதியமலை முனிமடியிற் பொருந்தி னாளைக்
குவியாத கஞ்சமலர் முகத்தி னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 9

மெய்ம்முழுதும் பால்போலு நிறத்தி னாளை
மேவுமறம் பொருளின்பம் வீடா னாளைக்
கையொருநான் குடையதமிழ்க் கற்ப கத்தைக்
கரும்புருவச் சிலையாளைக் கனிவா யாளைத்
தொய்யில்வன முலையாளைச் சுடருஞ் சங்கத்
தொடியாளைப் பிடியானை நடையி னாளைக்
கொய்ம்மலர்ச்சே வடிகாட்டி எனையும் ஆண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரை விளக்கம்

திருப்பள்ளியினின்றும் எழுந்திருக்கும் நாமகளைக் கூவியழைக்குமாறு காலைக்குயிலை ஆசிரியர் வேண்டுகிறார்.

(1) எல்லாவுலகுக்கும் அறிவுக்கலையை அருளிநிற்கும் நாமகளைத் தென்பாண்டி நாடாளுந் தமிழ்த் தெய்வமென்றார். அத்தெய்வம் தனது இருக்கையைப் பாண்டிநாட்டிலே வைத்து எல்லாவுலகினையும் ஆண்டு வந்தமை காட்டுதற்கு. ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி" என்று மணிவாசகப் பெருமான் இறைவனைக் கூறுவதுங் காண்க. கொன் - பயனிலாமை. மனவிருள் - அறியாமை.

(2) களபம் - சந்தனக் கலவை. கண்டு - கற்கண்டு. ஓடுதல் - இனிமைக்குத் தோற்றுப் புறங்காட்டி ஓடுதல். பாடை மாக்கள் - ஏனைய மொழி பயிலும் வேற்று நாட்டு மக்கள். அவர்கள் திருக்குறள், சிவஞான போதம், சிவஞானசித்தியார், திருவாசகம் முதலிய நூல்களைத் தமது பாடையில் மொழிபெயர்த் தெழுதிப் பயின்று அறிவு விளக்கம் பெறுகின்றனர். அந்நன்றியைக் கொண்டாடி அவர்கள் தமிழ்மொழியை நெஞ்சார வாழ்த்தித் துதித்தலைத் திறை என்கிறார்.

(4) தொண்டன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். தமிழ்மொழியின் தொன்மையும் கலைவளமுங் கண்டு பதினெண்பாடை மக்களும் வருகின்றனரென்க.

(5) முதல் மூன்று அடிகளும் நாமகளுக்கும் இறைவனுக்கும் சிலேடை, ஆதி நடு முடிவுமிலாதமர்ந்து - இறைவனுக்குப் பொருள் கொள்ளுமிடத்துத் திருமாலுக்கும் நான்முகனுக்கும் இடையே ஆதி நடு முடிவின்றிச் சோதிவடிவாய் நின்றதை உணர்த்தும். நாமகளுக்குக் கொள்ளுமிடத்து, மாயை காரியப்பட்ட காலத்துச் சுத்த மாயையினின்றும் தமிழ் தோன்றியமையின் அதற்கும் ஆதி நடு முடிவின்மை கொள்க. ஆருயிர்கட்குயிராகி அருளுமாற்றால் - அநாதியே ஆணவ மலத்தாற் கட்டுண்ட மன்பதைகட்கு உயிராத நின்று ஐந்தொழில் புரிந்து அருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுந் திறமென இறைவனுக்கும், மன்னுயிர்களுக்கெல்லாம் அறியாமை நீங்க அறிவுயிர்ப்பைக் கொடுத்து அருளுந் திறமென நாமகளுக்குங் கொள்க. ஓதுபணிமொழி தன் பாலுடையவாற்றால் - அடியவர்கள் அன்பினாற் பணிந்துகூறும் பாடல் மொழிகளை உடைமையால் என நாமகளுக்கும், உமாதேவியாரை இடப்பாகத்துடைமையால் என இறைவனுக்கும் கொள்க. ஊழிபல வுலப்பினு மாறுறாத வாற்றால் - படைப்பின் தொடக்கத்திற் சுத்த மாயையினின்றும் தோன்றி, மறையுங் கலையும் மந்திரமுமாய் விரிந்து, உலகு நிலவுந் தோறும் நிலவு, ஒடுங்கும்வழி மீட்டும் அச்சுத்த மாயையிலே ஒடுங்குதலின் பலவூழிகாலக் கழிவினும் அழியாது நிற்குமெனத் தமிழ்மொழிக்கும், எல்லாப் பொருள்களையும் தனக்குள்ளே அடக்கித் தான் பிறிதொன்றிலே அடங்காது நின்று, அப்பொருள்களனைத்தையும் இயக்குவித்து ஊழிதோறும் தன்னியல்பு திரியாது நிற்குமென இறைவனுக்கும் கொள்க. கோது - அறியாமையாகிய குற்றம்.

(6) பங்குக்குப்பட்ட பனந்துண்டம் மூன்று பழமுதவ வாய் மலர்ந்த பாட்டு ''திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும், மங்கைக் கறுகிட வந்துநின்றார். மணப் பந்தரிலே, சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்துக், கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு, நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி சிவந்து, பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே'' என வரும் ஒளவையார் பாட்டு. கொங்குக்குக் கிழியறுத்துக் கொடுத்தது - தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது. குயக்கொண்டா னுயிர் நீக்கிக் கொடுத்தது - கடைச்சங்க காலத்தில் ஆரியம் நன்று தமிழ் தீதென்று வம்புரை கூறிய குயக்கொண்டான் நக்கீரனாராற் சாகவும் பிழைக்கவும் பாடப்பட்டது. அறுந்த சிர மாயிரமு மடைவித்தது - ஒட்டக்கூத்தர் செங்குந்தர் மரபிற் பிறந்த தமிழ்ப் புலவர். இவரைச் செங்குந்தர் தங்கள் மீது பிரபந்தம் பாடுமாறு கேட்க இவர் குலப்புகழாமென்று மறுத்தனர். அதனாலவர்கள் வெகுண்டெழுந்து இவரைத் கொல்ல முயன்றனர். இவர் தன்பாலன்புள்ள சோமனென்பவனிடம் அடைக்கலம் புகுந்தார். சோமன் இவரைக் காக்க விரும்பித் தனது மகனைப் பேழையொன்றிலடைத்துத் தன் வீட்டைச் சூழ்ந்து நின்ற செங்குந்தர்பாற் காட்டி இதன்கணுள்ள கூத்தரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் விரும்பியவாறு செய்ம்மின் என, அவர்கள் அப்பேழையைக் கொண்டு போய்ப் பார்க்கையில் அதனுள்ளே சோமனது மகனிருக்கக் கண்டு சோமனது வண்மையை வியந்து அவனைப் போகவிட்டனர். சோமன் செங்குந்தரை நோக்கி நீங்கள் உமது வீரத்தை இப்போது காட்டுவீராயின் புலவர் உங்களைப் பாடாதீரார் என, அவர்களுடன்பட்டு ஆயிரங் குந்தரது சிரங்களை அறுத்துக் குலோத்துங்க சோழனது அரண்மனைக்கு முன்னே சிங்காசனம் போல வடுக்க அச் சிரசிங்காசனத்திலிருந்து ஒட்டக்கூத்தர் நாமகளை நினைந்துபாடி அறுந்த சிரங்களை ஒட்டச் செய்தனர். சோழன் கண்டு வியந்து இவருக்கு ஒட்டக்கூத்தர் எனப் பெயருங் கொடுத்து இவர் மரபினருக்குச் சிறப்புஞ் செய்தான். அதன்பின் கூத்தர் ஈட்டியெழுபது என்னும் பிரபந்தம் பாடித் தமது மரபினைச் சிறப்பித்தார்.

(8) விளரியாழ் - நெய்தல் யாழ். ஆசுமுதல் நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைச் செய்யுள்.

(9) துவியாத கஞ்சமலர் - இல்பொருளுவமை. தொய்யில் - முலையிலும் தோளிலும் எழுதுங் கோலம்.

****************

## 4. ஆசைப் பத்து

மஞ்சுதவழ் நெடுங்குடுமி மாடக் கூடல்
மன்னுதமிழ்ச் சங்கமணித் தவிசின் மேவிப்
பிஞ்சுமதி வேணியனுங் குமர வேளும்
பெரியதவக் குறுமுனியும் பிறருஞ் சூழக்
கஞ்சமலர் மதிமுகமும் பவள வாயும்
கயல்விழியுங் கமலமலர்த் தாளுங் கொண்டே
அஞ்சொலொரு மூன்றுமருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதரிக்கப் பேசுபுற மொழிபோ லாது
கல்லினையும் உருக்குமொழி கனிந்த வாயும்
பாதரித்த பணைத்தோளும் படிக மாலை
பனுவலியாழ் பரிக்குமொரு கரங்கள் நான்கும்
கோதரித்தென் தலைமிசையே குலவச் சூட்டுங்
கோகன தத் தாள்களுமாய்க் கூடி யன்பர்
ஆதரித்துப் போற்றவருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 2

எழுத்துவகை ஈரைந்து முகம தாக
இயல்மொழியும் புணர்வுமிரு விழிக ளாக
வழுத்துமொரு சொன்னான்குங் கரங்க ளாக
மருவுதொட ரியலரிபோ லிடைய தாகக்
கொளுத்துமிரு வகைப்பொருளுங் கொங்கை யாகக்
கூறுமியாப் பைவகையு மொழிக ளாக
அழுத்தமுறு மணியணியாந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 3

வள்ளுவன்முப் பால்முடித்து மணிகள் சூடி
வளையினொடு குழையணிந்து மாலை வேய்ந்து
தெள்ளுதமிழ்த் தேவாரம் புனைந்து ஞானத்
திருக்கோவை பூண்டுமே கலையுஞ் சேர்த்தித்
தள்ளரும்வா சகம்பேசிச் சிலம்பு பூட்டித்
தளிரடிமேல் நாலடிப்பா துகையு மாட்டி
அள்ளுமழ கொழுகவருந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதளித்த புத்தனையும் ஊமை யாக்கி
மன்னன்மகள் மூங்கைதனை மாற்றிப் பஞ்ச
வேதனைக்குப் பொருளருளிப் பிணிகள் வீட்டி
விரிபசும்பொன் னாற்றெறிந்து குளத்தே கண்டு
சூதடுத்த சமணர்சுடர்க் கழுவி லேறச்
சுடுநெருப்பின் மீதேறித் தொண்டர் சூழ்ந்தே
ஆதரித்துப் போற்றவருள் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 5

வளவியதென் பொதியமலைச் சாரல் போகி
மறுபுலமங் கையர்சூழ மணிப்பூக் கொய்தும்
பழகுபசுங் கிளிமிழற்றிக் குயிலைக் கூவிப்
பந்தடித்து மணியூசல் பரிவி னுந்தி
ஒழுகுசுனை நீர்குடைந்து வேங்கை நீழல்
ஒருமயில்கண் டுடனாடிக் கீதம் பாடி
அழகொழுக விளையாடுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 6

மங்குலுறை வேங்கடமுங் குமரி யாறும்
வாரிதியும் நான்குபுடை மதில்க ளாக்கிச்
சங்கவளம் உறுகூடல் அரணஞ் சூழ்ந்த
தலைநகரா யறமுதலாந் தானை போற்றத்
துங்கமுடி மன்னர்திரு மேனி காக்கத்
தூயகவி வாணர்சொலுஞ் சொற்கோல் ஓச்சி
அங்கணுல குயிராளுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழல்திருத்தி அலர்முடித்துத் திலதந் தீட்டிக்
கோவிரண்டு மையெழுதிக் குழைகள் பூட்டி
வளையலிட்டுக் கச்சணிந்து வடங்கள் மாட்டி
மாசுதவிர் மேகலையை மருங்கிற் கூட்டிப்
பழையதமிழ்ச் சிலம்பணிந்து பட்டு டுத்திப்
பார்வையெட்டால் மலரயனார் பார்க்கப் பார்க்க
அழகொழுக அமுதொழுகுந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 8

மண்ணகத்தார் செவிவாயால் வாரி யுண்ண
வானகத்தார் வாயூறி மறுகுங் கோலம்
எண்ணகத்து மெழுத்தகத்து நிறைந்த கோலம்
இறைவன்வாய் மொழியிலிருந் தெழுந்த கோலம்
பண்ணகத்த வேழிசையாய்ப் பயின்ற கோலம்
பாவகத்தும் நாவகத்தும் பரவுங் கோலம்
அண்ணகத்துச் செழுஞ்சுடராந் தெய்வக் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 9

படிபுகழுங் கவிகாள மேக முன்னாட்
பாரரசன் உடனிருக்கப் பரவுங் கோலம்
வடிதமிழால் அடியெடுத்து மதுரங் கைப்ப
மறலிகண்டத் தாகசொல அமைந்த கோலம்
கடிகமழ்தார் முடிமன்னன் வாரம் போகக்
காரினமண் மாரிபெயக் கனன்று மேனாள்
அடியெடுத்த சிலம்பொருவர்க்(கு) அருளுங் கோலம்
ஆசையுற்றேன் இனிக்காட்டி அருளு வாயே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரை விளக்கம்

நாமகளது அருள் வடிவத்தைத் தியானமுகத்திற் காணுதற்கு ஆசையுற்ற ஆசிரியர் அதனைக் காட்டியருளுமாறு வேண்டுகின்றார்.

(1) மஞ்சு - மேகம். மணித் தவிசு - அழகிய இருக்கை. பிஞ்சு மதி வேணியன் - இளம்பிறையை முடியிற்றரித்த சிவபிரான். கஞ்ச மலர் - தாமரைப் பூ. தாமரைப் பூவையும் பூரண சந்திரனையும் ஒத்த முகம். அஞ்சொலொரு மூன்று - இயல் இசை நாடகமாகிய முத்தமிழ்.

(2) உரப்பியும் கனைத்தும் எழுப்பும் இயற்கைக்கு மாறான ஒலிக்கூட்டங்களையுடைய ஆங்கிலம் இலத்தீன் சிங்களம் முதலிய மொழிகளின் வல்லோசைகள் காதுகளைத் துளைத்துத் துன்பம் செய்வனவாதலின் ''காதரிக்கப் பேசு புறமொழி" யென்றார். தமிழ்மொழி இயற்கைக் கமைந்த மெல்லோசைக் கூட்டங்களை யுடைமையாற் கல்லினையும் உருக்குமென்றார். பாதரித்த - பாடல்களை மாலையாக வணிந்த. பாத்தரித்த எனற்பாலது பாதரித்த எனக் குறைத்தல் விகாரம் பெற்று நின்றது. கோதரித்து - அறியாமையாகிய குற்றத்தை நீக்கி. கோகனதம் - தாமரை.

(3) இருவகைப் பொருள் - அகப்பொருள் புறம்பொருள் என்பன.

(4) முப்பால் - திருக்குறள். மணிகள் - சீவகசிந்தாமணியும், நான்மணிக்கடிகை மும்மணிக்கோவை என்பனவும். வளை - வளையாபதி. குழை - குண்டலகேசி. மாலை - பாமாலைகள். மேகலை - மணிமேகலை. வாசகம் - திருவாசகம். சிலம்பு - சிலப்பதிகாரம். நாலடிப் பாதுகை - நாலடியாராகிய மிதியடி. மாட்டி - கொளுவி.

(5) வாது - வழக்கு. அழிவழக்குரைத்த புத்தன் ஊமையாகியமையும் அரசன் மகள் மூங்கை நீங்கியமையும் திருவாதவூரடிகள் புராணத்திற் காண்க. சூது - வஞ்சனை.

(6) வளவிய - வளப்பம் மிகுந்த. மறுபுல மங்கையர் - வேற்றுப்புல மொழிகளாகிய மடவார். மலர்பூ - மலர்ந்த பூ. வேற்றுப்புல மடவார் குற்றேவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் பொதிய மலைச் சாரலிலே கிளியொடு பேசியும் குயிலுடன் மாறு கூவியும், பந்தடித்தும், ஊசலாடியும் சுனை குடைந்தும், மயில்நடங் கண்டும், வண்ணப்பாடல் படித்தும் விளையாடி வருகின்ற தெய்வ அருட்கோலமென்க.

(7) மங்குல் - மேகம். வாரிதி - கடல். பழந்தமிழகத்தின் கிழக்கு மேற்கு எல்லைகள் கடல் என்க.

வேங்கடமுங் குமரியும் கடல்களும் நான்கு மதிலாக, மதுரையம்பதி தலைநகராயமைய, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் தானையாகி நின்று புறத்தே பாதுகாக்க, மூவேந்தரும் பிறரும் மெய்க்காப்பாளராளமைத் தூய நெஞ்சினராகிய புலவர்களது சாயாத சொல்லாஞ் செங்கோல் தாங்கி, உலகத்து மன்னுயிர்களைப் பொதுவற ஆட்சி செய்யாநிற்கும் தெய்வக் கோலம் என்க.

(8) கோ - கண், குழைகள் - காதணி வகைகள், பார்வை - கண். அயன் - பிரமன். பிரமன் எட்டுக் கண்களாலும் பார்த்து இன்புற்ற திருக்கோலத்தை ஆசிரியர் அகக்கண் ஒன்றினாலே கண்டு இன்புறுதலை வேண்டுகின்றார். அமுது - தியானமுகத்திலடையும் பேரின்பம். ''அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறு மேற்றினன்'', எனவரும் மணிவாசகப் பெருமான் வாக்கும் ஓர்க.

(9) செவிவாய் - செவியாகிய வாய். வாரி - ஒருசேர அள்ளி. மறுகும் - வருந்தும். எண் - தருக்கமும் கணிதமும். எழுத்து - இலக்கியமும். இலக்கணமும்.

(10) படி - உலகம்

காளமேகப் புலவர் ஒருமுறை திருமலைராயன் சபைக்குச் செல்ல அங்கிருந்த புலவர்கள் பொறாமையினாலே அவரை ஏற்றுக் கொள்ளாது இகழ்ந்தனர். அரசனும் புலவர்கள் பக்கமாக நின்று அவருக்கு இருக்க ஆசனங் கொடாதிருந்தான். உடனே அவர் நாமகளை நினைந்து சரசுவதி மாலை பாடித் துதிக்க அரசனிருந்த ஆசனம் வளர்ந்து இடந் தந்தது. அவர் அவ்விடத்திலிருந்து அரசனவைக்கண் இருந்த புலவர்களைப் பலவிதமாகவும் பாட்டில் வென்று யமகண்டம் பாடிப் புகழ்பெற்றார். அப்போதும் அரசன் அவருக்குச் சிறப்புச் செய்ய நினையாது, தனது அவையத்துப் புலவர்கள் பக்கமாகவே நின்றான். அதுகண்ட காளமேகம் வெகுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கோளரிருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர் - நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்''

என்று வசைபாடித் திருமலைராயன் பட்டணத்தைத் திரும்பிப் பாராமற் செல்லப் பட்டணம் மண்மாரியால் நிறைந்தது என்பது இப்பாட்டிற் குறித்த கதைச் சுருக்கம்.

மதுரம் - அதிமதுரகவி. காளமேகத்தின் முன் மதுரகவி கைத்துப்போய் விட்டதென்ற நயம் வியக்கத்தக்கது. மறலிகண்டத் தாசு - யமகண்டம் என்னும் ஆசுகவி. முடிமன்னன் - திருமலைராயன். வாரம் போக - ஒரு பக்கம் சார. காரினம் - மழைமேகக் கூட்டம்.

அடியெடுத்த சிலம்பொருவர்க் கருளுங் கோலம் - கம்பருக்குச் சிலம்பு கொடுத்த கோலம். அது வருமாறு :- கம்பர் ஒருமுறை பாண்டிநாடு சென்ற போது, அங்கே கம்பராமாயணப் பிரசங்கம் நடந்தது. அவர் அதிலே வியக்கத்தக்க இடங்களில் வியக்காமை கண்டு அரசன் அவரது வரலாறு வினாவினான். அவர், தான் கம்பர் கற்றுச்சொல்லி என்று கூறிக் கம்பராமாயணப் பிரசங்கஞ் செய்து காட்டினார். அதைக் கேட்டு அரசன் அவரிடத்து அன்பு கொண்டதைக் கண்ட சபைப் புலவர்கள் பொறாமை கொண்டு அம்பட்டனொருவனுக்குப் பொருள் கொடுத்துக் கம்பரைத் தம்மவர் என்று கூறச் செய்தனர். கம்பர் சிறிதும் அஞ்சாது சரசுவதியின் திருவடிப் பொற்சிலம்பில் ஒன்று பெற்று அதைப் பாண்டியனுக்குக் காட்டி, இப்படிப்பட்ட சிலம்பொன்றை என் தாயாதியாகிய இவனுக்கும் எங்கள் முன்னோர் கொடுத்துப் போயினர். அதை அவன் தரின் இரண்டும் அரச பத்தினிக்கு ஆகும் என்றனர். அம்பட்டன் தன்னிடம் இல்லாமையைத் தெரிவித்து அரசனது தண்டனைக்குப் பயந்து உள்ள காரியத்தை யொழியாது சொன்னான். அது கேட்ட அரசன் வெகுண்டு அவைப் புலவர்களைத் தண்டிக்க எண்ணுகையிற் கம்பர் அவர்களின் உயிரைக் காக்க நினைந்து அரசனுக்குச் சரசுவதி தரிசனங் காட்டிச் சிலம்பினைச் சிலம்பில்லாத திருவடியிற் சேர்த்துச் சரசுவதி அந்தாதி பாடித் துதித்தார். அரசன் அவரைக் கம்பரென அறிந்து தானும் தேவியுமாகப் பல்லக்கிலேற்றிச் சுமந்து சிறப்புச் செய்தான் என்பது.

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. செந்தமிழ்ச் செல்வி

விந்துநாத மீதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
வெண்கமல மேலிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 1

சந்திரனைப் போனிறத்தாள் செந்தமிழ்ச் செல்வி
தத்துவங் கடந்து நிற்பாள் செந்தமிழ்ச் செல்வி 2

இயற்கையொலி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
என்றுமழி யாதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 3

வன்னவடி வாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
மன்னுயிரின் நாவுறைவாள் செந்தமிழ்ச் செல்வி 4

முன்னுள தமிழ்மொழிந்தாள் செந்தமிழ்ச் செல்வி
மூலமொழி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி 5

மாரிபோலும் பூங்குழலாள் செந்தமிழ்ச் செல்வி
வளருமிளம் பிறைநுதலாள் செந்தமிழ்ச் செல்வி 6

கூருமருட் கண்ணுடையாள் செந்தமிழ்ச் செல்வி
குனிபுருவச் சிலையுடையாள் செந்தமிழ்ச் செல்வி 7

எட்போலும் நாசியினாள் செந்தமிழ்ச் செல்வி
இன்னமுத மொழியுடையாள் செந்தமிழ்ச் செல்வி 8

முத்துப் போற் பல்லுடையாள் செந்தமிழ்ச் செல்வி
முருக்கம்பூ இதழுடையாள் செந்தமிழ்ச் செல்வி 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிபோலுங் கன்னத்தினாள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மிடறுடையாள் செந்தமிழ்ச் செல்வி 10

கோங்கரும்பு வனமுலையாள் செந்தமிழ்ச் செல்வி
குளிருமுத்து வடமுடையாள் செந்தமிழ்ச் செல்வி 11

வேய்போலுந் தோளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
மென்றொடிமுன் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி 12

செங்காந்தள் விரலுடையாள் செந்தமிழ்ச் செல்வி
செய்யதுகிற் கச்சுடையாள் செந்தமிழ்ச் செல்வி 13

மின்போலு நுண்ணிடையாள் செந்தமிழ்ச் செல்வி
மேகலை அரைஉடையாள் செந்தமிழ்ச் செல்வி 14

ஆலிலைபோல் வயிறுடையாள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மாலையினாள் செந்தமிழ்ச் செல்வி 15

உடுத்தபட் டாடையினாள் செந்தமிழ்ச் செல்வி
ஓங்கார உந்தியினாள் செந்தமிழ்ச் செல்வி 16

கன்னிவாழை மென்றொடையாள் செந்தமிழ்ச் செல்வி
காமர்கணைக் காலுடையாள் செந்தமிழ்ச் செல்வி 17

தண்டைகொஞ்சுந் தாளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
தாமரைப்பூஞ் சேவடியாள் செந்தமிழ்ச் செல்வி 18

தண்பொதியி லேபிறந்தாள் செந்தமிழ்ச் செல்வி
தவமுனிவன் மடிவளர்ந்தாள் செந்தமிழ்ச் செல்வி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடனகர் வாழ்வுகந்தாள் செந்தமிழ்ச் செல்வி
கோவேந்தர் ஏவல்கொண்டாள் செந்தமிழ்ச் செல்வி 20

புத்தகஞ்சேர் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
பொற்பளிங்கு மாலையினாள் செந்தமிழ்ச் செல்வி 21

வீணையிரு கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
வேதமுடி வாய்விளைந்தாள் செந்தமிழ்ச் செல்வி 22

நீரின்மே லேநடந்தாள் செந்தமிழ்ச் செல்வி
நெருப்பினுள் ளேகுளித்தாள் செந்தமிழ்ச் செல்வி 23

நஞ்சையமு தாக்கிவைத்தாள் செந்தமிழ்ச் செல்வி
நாள்கோள் விலக்கிவைத்தாள் செந்தமிழ்ச் செல்வி 24

வெய்யபிணி மாற்றிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி
வேழமதை ஓட்டிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி 25

உண்டமக வைப்பயந்தாள் செந்தமிழ்ச் செல்வி
ஊமைதனைப் பேசுவித்தாள் செந்தமிழ்ச் செல்வி 26

வள்ளுவர்முப் பால்குடித்தாள் செந்தமிழ்ச் செல்வி
வாரமணிக் கோவைகொண்டாள் செந்தமிழ்ச் செல்வி 27

சிந்தா மணிபுனைந்தாள் செந்தமிழ்ச் செல்வி
சேரன் சிலம்பணிந்தாள் செந்தமிழ்ச் செல்வி 28

மெய்ப்புலவர் வாயினிற்பாள் செந்தமிழ்ச் செல்வி
வேண்டும் வரந்தருவாள் செந்தமிழ்ச் செல்வி 29

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
பொன்மாரி தான் சொரிந்தாள் செந்தமிழ்ச் செல்வி 30

செய்த பிழைபொறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
தேடிவந் தேயருள்வாள் செந்தமிழ்ச் செல்வி 31

நினைத்த வுடன்வருவாள் செந்தமிழ்ச் செல்வி
நின்றுகவி பாடிடுவாள் செந்தமிழ்ச் செல்வி 32

என்றென்று போற்றிசெயச் செந்தமிழ்ச் செல்வி
இடர்நீக்கி ஆண்டனளே செந்தமிழ்ச் செல்வி 33

****************

## உரை விளக்கம்

கழங்காடுஞ் சிறுமியர் இருவர் பாடியதாகச் செய்தது.

(1) விந்து நாதம் - குடிலை என்னும் சுத்த மாயை.

(2) தத்துவம் - மாயையின் காரியப்பாட்டினால் உண்டாகிய தத்துவப் பொருள்கள்.

(3) தமிழ்மொழி இயற்கை ஒலிக்கூட்டங்களை உடையது. கனைத்தும் உரப்பியும் இயற்கைக்குப் பெரிதும் மாறாக உச்சரிக்கும் ஒலிக்கூட்டங்கள் தமிழிற் கிடையா. அதனாலேயே இது பல்லாயிர ஆண்டுகள் கழிந்தும் இறவாது. பழமைக்குப் பழமையாகியும் புதுமைக்குப் புதுமையாகியும் நிற்கும் கடவுள்போல நிலவி வருகின்றது. செயற்கை ஒலிக்கூட்டங்களை உடைமையாலே இதனோடு வழங்கிய பழைய பிறமொழிகள் இன்று இறந்துபட்டன.

(5) தமிழ் எல்லா மொழிகளுக்கும் மூலமொழி யென்பதைக் காலஞ்சென்ற கலைஞர், மாணிக்க நாயக்கரும், கத்தோலிக்க சமய குருவாகிய நல்லூர் ஞானப்பிரகாச அடிகளும் துணிந்து கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) மாரி - மழைமேகம்

(10) ஆடி - கண்ணாடி

6 - 18 இப்பாடல்களினால் நாமகளது அருள் வடிவம் முடிமுதல் அடிவரையும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

19 - 33 இப்பாடல்களினால் தமிழ்மகள் பொதியிலே பிறந்து, அகத்தியன் மடியிலே வளர்ந்து, மதுரையிலே அரசுபுரிந்து, மூவேந்தர் ஏவல்கொண்டு, தொண்டர்களிடத்துப் புரிந்த அருளாடல்களையும், தமக்கு அருள் செய்து வறுமை நீக்கிக் கவிபாடுவித்து இடர்நீக்கி ஆட்கொண்ட திறத்தினையும், நினைந்துருகிப் பாடுந் திறம் நயக்கத்தக்கது.

இதனை, உருதிரோற்காரியாண்டு கார்த்திகைத் திங்கள் ஐந்தாம் நாளிற் பாடியருளினார்.

****************

## 6. போற்றித் திருவகவல்

பொன்மகள் கொழுநனும் புத்தேன் கூட்டமும்
மன்மலை நட்டு மதித்திட எழுந்த
தெளிவளர் அமுதும் ஒளிவளர் பளிங்கும்
உருக்கி வார்த்தன்ன திருக்கிளர் மேனியும்
அருண்மழை பொழியும் வரிநெடு விழிகளும்
வாங்கிய புருவமும் பூங்குமிழ் நாசியும்
முத்தமிழ் மதுரப் புத்தமு தொழுகும்
பவளவாய் மலருந் தவளவாண் நகையும்
காரிருள் கடந்த வாரியங் கூந்தலும்
பொன்புனை களனும் மென்பண்ணத் தோளும்
மாலையும் நூலும் யாழு மேந்திய
வாலிய காந்தண் மலரொரு நான்குஞ்
சந்தணி தனமுந் தந்தன இடையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலன் புடனே நினைதொறுஞ் சுவைக்குஞ்
செஞ்சிலம் பலம்புஞ் சேவடி யிணையும்
வெண்பட் டாடையுந் தண்முத்த மாலையும்
ஆராக் காதலொ டனுதின நோக்கினுந்
தீராப் புதுமைத் தெய்வத வடிவுமாய்
வெண்டா மரைமேல் வீற்றிருந் தருளுந்
தண்டா முத்தமிழ்த் தாயே போற்றி
சங்கரன் மலர்த்தாள் தவமுனி வேண்ட
அங்கவன் அருளிய அமுதே போற்றி
ஆறுமுகன் அருள்பெறு சிறுமுனி மடிமிசைக்
குறுகுறு நடந்த குருந்தே போற்றி
பூவினின் மேவிய புத்தேன் பொய்யா
நாவினின் மேவிய நங்காய் போற்றி
அல்லியல் கண்டத்(து) அரனிடம் அமரும்
வல்லிதன் கண்ணாய் வதிந்தாய் போற்றி
பூமகள் கேள்வன் புரத்தினிற் பொருந்தும்
மாமகள் ஒருமரு மகளே போற்றி
ஆடக மதுரை அருந்தமிழ்ச் சங்கக்
கூடலின் வளர்ந்த கொம்பே போற்றி
மன்னுயிர் நாவெனும் வாவியின் மலர்ந்த
பொன்னறி யாநறும் பூவே போற்றி
தென்னவன் சேரன் செம்பிய னென்னு
மன்னவர் மூவர் வாழ்வே போற்றி
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று
அந்நான் கெல்லை யகலிட மாளும்
பன்னாப் பெருமைப் பாரதி போற்றி
மெய்ந்நா விரும்பும் வித்தகி போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவி போற்றி
பொருப்பிலே பிறந்து புகழிலே கிடந்து
நெருப்பிலே நின்று நீரிலே தவழ்ந்தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் நாவிற் சிந்தையிற் கலந்து
மன்னிய கருணை வாரிதி போற்றி
உள்ளநெக் குருக உரோமஞ் சிலிர்ப்ப
வெள்ளநீர் கலுழ மெய்விதிர் விதிர்ப்ப
நாத்தழு தழுப்ப நயந்துநின் றுன்புகழ்
ஏத்துநர் நெஞ்சத் திருள்கெடுத் தருளித்
தேனினும் பாலினுந் தெவிட்டா தினிக்கும்
வானினுங் காணா மணியே போற்றி
கல்வி சற்றிலாக் கசடனே னெனையும்
வல்லிதின் ஆண்ட மயிலே போற்றி
சிறுமையும் பிணியுந் தீவினை யிருளும்
வெறுமையுஞ் சீய்த்த வெயிலோ போற்றி
மேவிய பல்கலை விரிபொழி லிருந்து
கூவிய ஏழிசைக் குயிலே போற்றி
கற்றவர் விழுங்குங் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி
சேணினும் அறியாத் திருவே போற்றி
காணினும் இனிக்குங் கரும்பே போற்றி
விண்ணகப் புலவர் வெள்கி வாயூற
மண்ணகத் தெழுந்த மருந்தே போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணே போற்றி எழுத்தே போற்றி
சுடுபிணி மாற்றிய சுடர்க்கொடி போற்றி
கடுவிடந் தீர்த்த கனங்குழை போற்றி
கூடிய சமணர்கள் கூர்ங்கழு வேற
ஏடெதிர் ஏறிய ஏந்திழை போற்றி
ஆருயிர் வௌவி அருளினை போற்றி
சீரிய ஞானச் செழுஞ்சுடர் போற்றி
செங்கலைப் பொன்னாய்ச் செய்தனை போற்றி
அங்கமும் வேதமும் அறைந்தனை போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பினைப் பெண்ணாய் எடுத்தனை போற்றி
வன்பினை மாற்று மணியே போற்றி
அரும்பொருள் இன்பம் அறம்கதி நான்குந்
தரும்பெருங் கற்பக தருவே போற்றி
அயனுடன் சேர்ந்துல களிப்பாய் போற்றி
புயலுடன் கலந்தவை புரப்பாய் போற்றி
அரனுடன் புணர்ந்தவை அழிப்பாய் போற்றி
உரனுடை நெஞ்சின் ஒளியே போற்றி
பூவொடு மணமும் போன்றாய் போற்றி
பாவொடு பழகிய பாவாய் போற்றி
ஆவியை உருக்கும் அன்பே போற்றி
பாவியைத் தூக்கும் பதத்தாய் போற்றி
மானே போற்றி மடப்பிடி போற்றி
தேனே போற்றி தெளிவே போற்றி
அழியா(து) ஊழியும் அமர்ந்தாய் போற்றி
பழியாச் செழுநிதி படைத்தாய் போற்றி
நோக்கரு நுண்ணரு வானாய் போற்றி
வாக்கொடு மனமும் அடங்காய் போற்றி
ஊமைக்கு உரைதரும் உத்தமி போற்றி
சேமக் கலையின் தெளிவே போற்றி
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குந்
தெள்ளிய பாகின் திரளே போற்றி
கம்ப னருளிய கவிச்சுவை மாந்திச்
செம்பொற் சிலம்பருள் செய்தாய் போற்றி
இந்தணி செஞ்சடை இறைவனை இருளில்
சுந்தரன் தூதாய்த் தூண்டினை போற்றி
கொழிதமிழ்க் கொங்கு தேரெனக் கூறிக்
கிழிதனை அறுத்த கிளியே போற்றி
உயிரே போற்றி உணர்வே போற்றி
செயிர்தீர் அறிவின் செல்வி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வைக்(கு) அருந்தமிழ் அருளிய மதுரக்
கொவ்வைக் கனிவாய்க் கொடியே போற்றி
ஆதியும் அந்தமும் அகன்றாய் போற்றி
சோதிமெய்ஞ் ஞானச் சுடரே போற்றி
முழுதுல காண்ட முதல்வி போற்றி
பழுதறு செஞ்சொற் பகர்ந்தாய் போற்றி
அன்னக் கொடியுடை அரசி போற்றி
வன்னக் கொடியிடை மடவாய் போற்றி
ஓரெழுத் தறியா ஒருவன் என்னையுஞ்
சீரிய கல்விச் செழுநிதி உதவித்
தெரிவன தெரிந்த செல்வர் கோட்டிக்(கு)
உரியவ னாக்கிய வெண்ணுதல் போற்றி
மறைபிணி கதவந் திறந்தாய் போற்றி
குறைதவிர் கோமளக் கொழுந்தே போற்றி
நிதியே போற்றி நிறைவே போற்றி
கதியே போற்றி கசிவே போற்றி
பொன்னே போற்றி புலனுணர் விறந்த
மின்னே போற்றி விளக்கே போற்றி
அன்னிய மொழிகளும் அடிதொழு தேத்த
மன்னிய சிந்தா மணியே போற்றி
எழுதா நான்மறை யென்றுநின் றேங்கத்
தொழுதகு தமிழ்மறை சொன்னாய் போற்றி
பழமையும் புதுமையும் படைத்தாய் போற்றி
எழுமையுந் தொடர்தரும் இன்பே போற்றி
சினத்தொடு புத்தனைச் செறுத்தாய் போற்றி
மனத்துயர் நீக்கு மருந்தே போற்றி
நாவலங் கோலாய் நடத்தினை போற்றி
பாவலங் காரப் பழம்பொருள் போற்றி
அரும்பொருள் ஐந்தும் ஆனாய் போற்றி
விரும்புதல் வெறுத்தல் இல்லாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலையுண் டிறந்த முதிர்சுவைக் குதலை
மதலையை வாவென அழைத்தாய் போற்றி
நாளுங் கோளும் நலிமிடி பிணியும்
பாழும் வினையும் பறிப்பாய் போற்றி
பாமகள் போற்றி நாமகள் போற்றி
பூமகள் போற்றி புகழ்மகள் போற்றி
முத்தமிழ்க் கல்வியும் நாற்கவிப் புலமையும்
ஐம்புலன் அடக்கமும் அறமுகற்(கு) அன்பும்
எழுவகைப் பிறவியும் எம்மைவிட் டகலா
எண்வகைச் சித்தியும் எங்களுக் கருளி
இன்பினுந் துன்பினும் இரவிலும் பகலிலும்
அன்புடன் காத்தருள் அன்னாய் போற்றி
யாவையும் உடனாய் அறிவாய் போற்றி
அறிந்தருள் செய்யும் அணங்கே போற்றி
அறிவினுள் அருளால் அமர்ந்திருந்(து) எனக்குக்
குறைவறு புலமை கொடுத்தாய் போற்றி
குறைவறு புலமை கொடுத்திடக் கூறும்
நறுந்தமிழ் மாலை நயந்துகொண் டருளி
ஏவருங் காணா(து) எங்கணும் நிறைந்த
மூவா இளநலங் காட்டிமுன் நின்றே
அஞ்சலென்(று) அருளிட வேண்டும்
பஞ்சணி நூபுர பாதபங் கயமே

*****************

## உரை விளக்கம்

போற்றி என்ற ஈற்றுச் சீருடைய அடிகளின் மிகுதிகொண்ட திருவகவல் ஆதலின் போற்றித் திருவகவல் என்னும் பெயர்த்தாயது.

பொன்மகள் கொழுநன் - திருமால், புத்தேள் கூட்டம் - தேவர் கூட்டம். மன்மலை - மந்தரமல்லை. மதித்திட - கடைந்திட, மதித்தல் - கடைதல், தெளிவளர் அமுதும் - தெளிந்த அமுதும்; தெளிவின் மிகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட வளர் என்றார். தெளி - முதனிலைத் தொழிற்பெயர். குடிலையின் காரியமாய்ச் சொல்லுலகுக்குத் தெய்வமாகிய உரைமகளது தெய்வத் திருமேனியின் தூய்மையும் பேரொளியும் இனிது புலனாக அமுதையும் பளிங்கையும் உவமை கூறினார். அமுதையும் பளிங்கையும் உருக்கிவார்த்தன்ன என்றது இல்பொருளுவமை. வாங்கி - வளைந்த. வார் இருங் கூந்தல் - நீண்ட கரிய கூந்தல். பொன்புனைகளன் - பொன் அணிகலன்கள் அணிந்த கழுத்து. பொன், கருவி யாகுபெயர். களன் - களம். மொழியிறுதிப் போலி. பணை - மூங்கில். தந்து அன்ன இடை - நூலினை ஒத்த இடை. அலம்புதல் - ஒலித்தல்.ஆராக் காதல் - நிறைந்த பேரன்பு. ஆர்தல் - நிறைதல். தெய்வத வடிவு - தெய்வக் கோலம். தண்டா முத்தமிழ் - குறையாத முத்தமிழ். தவமுனி - அகத்தியர். குருந்து - குழந்தை. பூவினின் மேவிய புத்தேள் - பிரமன். அல் - இருள். அரனிடம் அமரும் வல்லி - உமை. உமாதேவியாருக்கு ஒரு கண் இலக்குமியும் ஒரு கண் நாமகளு மாதலின் வல்லிதன் கண் எனப்பட்டது.

பூமகள் - பூதேவி. மாமகள் - சீதேவி. சீதேவிக்கு நாமகள் மருமகள். ஆடக மதுரை - பொன்மதுரை. கூடல் - நான்மாடக் கூடல். பொன் - இலக்குமி.

பௌவம் - கடல். பன்னாப் பெருமை - சொல்லி யமையாத பெருமை. பாரதி - கலைமகள். கலுழ - சிந்த, தெவிட்டாதினிக்கும் - மிகுந்தவழி வெறுப்பைத் தராது என்றும் ஒரு படித்தாய் இனிக்கும்.

கசடன் - அறிவில்லாதவன், வெறுமை - இல்லாமை. சீய்த்த - அழித்த. சேண் - தூரம். கதி - வீடு. உரன் - வலிமை. சேமக்கலை - முன்னோர்களாற் சேமித்து வைக்கப்பட்ட கலைகள். இந்து - பிறை. கொழிதமிழ் - புலவர்களால் ஆராயப்பட்ட தமிழ். கிழி - பொற்கிழி; தருமிக்குப் பொற்கிழி கொடுத்த வரலாற்றை திருவிளையாடற் புராணத்திற் காண்க. செயிர் - குற்றம். கோட்டி - அவை. நா வலங்கோலாய் - நாவை வெற்றியமைந்த செங்கோலாக. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. நூபுரம் - காற்சிலம்பு.

****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1924 . 08 . 15



உதிர்வு
2017 . 08 . 29

(தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்
புலவரின் மருமகன்)

## அமரர் . பொன்னுத்துரை சிவகுருநாதன்

வாழ்ந்த மனிதன் மரணந் தன்னால்
வீழ்ந்து போனான் விதியின் முடிவாம்
உறவின் பிரிவே உளுக்கு மென்ன
மறலிப் பிடியில் மனதா ஓயர்ந்த
அருமைத் தாயார் அருளம் மாவெனும்
பெருமைக் காகிப் பேசும் மூர்த்தி
அரிஞர் துணையாம் ஆற்றல் கூட்டும்
நெறியின் மக்கள் நிதியாய்ப் பெண்ணும்
வெளி நாடேகி விளங்கும் நிதர்
தெளிவி வாண்கள் திகழும் மூவர்
பாசப் பிணைப்பால் பதைக்கும் வண்ணம்
ஈச னடியை இணைந்தா ரான்மா
முத்திக் காக முயங்கித் தொழுவோம்
பத்திக் கேற்பப் பணியைத் தொடர்வோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
**1924.08.15**

விண்ணில்
**2017.08.29**

அமரர்

## திரு. பொன்னுத்துரை சிவகுருநாதன்

(சங்கீத ஆசிரியை லேகா அவர்களின் தந்தையார்)

மானிடத்தின் அரிய பிறப்பெடுத்து
சீரிய குழந்தைகளைக் கொடுத்து
தந்தைக்கேயுரிய பணிகளைத் தன்
பேறெனை உவந்தளித்த
பெருமகனாரே!

தங்கள் ஆத்மாவின் சாந்திக்காகவும்
குடும்பத்தாரின் ஆறுதலுக்காகவும்
இறையருளை வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தகவல்
சுருதி லய மன்றம்
சங்கீத நடன ஆசிரியர்கள்
தெற்கு வலயம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்காம் அமரர். பொன்னுத்துரை சிவகுருநாதன் அவர்கள் சிவபதமடைந்த வேளை எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், ஆத்ம சாந்தியில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும், மலர்தூவி மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள் வெளியிட்டவர்களுக்கும், அமரர் கிரியை, அந்தியேட்டிக்கிரியை, சபிண்டீகரணக் கிரியை மேற்கொண்ட அந்தணப்பெருமக்களு -க்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை சிறப்பாக நடைபெற பல வகைகளிலும் உதவிய அனைவருக்கும் இந்நூலை நல்லவகையில் தொகுத்துதவிய தமிழருவி த.சிவகுமாரன் அவர்களுக்கும், சிறப்புற அச்சிட்ட கலைமகள் அச்சகத்தினருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி வழங்கிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எண்ணைச் சிறந்த  எழுத்தை! இருவிழி ஆக்கி எழு
பண்ணைப் பயின்றமொழி ஆக்கிய ஞானப் பசுங்கிளியே
கண்ணைத் திறந்து ஒளி காட்டுதி முன் கதவந் திறந்த
அண்ணல் தமிழ்த் தெய்வமே அடியேன்உன் அடைக்கலமே.

மோதிக் கலக்கும் வறுமையும் நோயும் முடித்து உனது
சோதிக் கமலத் துணைமலர் சூட்டித் துணை அருள்வாய்
வாதித்த புத்தனை ஆக்கியோர் ஊமையைப் போக்கிவைத்த
ஆதித் தமிழ்த்தெய்வமே அடியேனுன் அடைக்கலமே.

– தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kalaimagal